


**09. 12. 2025**

## தலைப்புச் செய்திகள்

1. மக்களின் வாழ்வாதாரத்தின் முக்கிய அம்சமாக கைவினை கலைகள் திகழ்வதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தொ◌ிவித்துள்ளா◌ா◌்.

2. இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவைகள் படிப்படியாக சீரடைந்து வருவதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளா◌ா◌்.

3. சென்னையில் நடைபெறவுள்ள பன்னாட்டு புத்தக கண்காட்சிக்கான இலச்சினையை மாநில பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று வெளியிட்டா◌ா◌்.

4. வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நாகை மாவட்டத்தின் ஓா◌ிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தொ◌ிவித்துள்ளது.

5. இந்திய - தென்னாப்பி◌ா◌ிக்க அணிகளுக்கு இடையேயான முதலாவது 20-20 கி◌ா◌ிக்கெட் போட்டி கட்டக்கில் இன்றிரவு நடைபெறுகிறது.

## இனி வி◌ா◌ிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

### குடியரசு தலைவர்

கலைகள் மக்களை பல்வேறு கலாச்சாரங்களுடன் இணைப்பதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தொ◌ிவித்துள்ளா◌ா◌்.

புதுதில்லியில் தேசிய கைவினை வாரத்தை ஒட்டி கைவினைஞர்களுக்கு விருதுகளை இன்று வழங்கி பேசிய அவர், மக்களின் வாழ்வாதாரத்தின் முக்கிய அம்சமாக கைவினை திகழ்கிறது என்றார்.

இத்துறையில் நாடுமுழுவதிலுமிருந்து, குறிப்பாக ஊரக பகுதிகளை சேர்ந்த 32 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுவதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் சிறந்த 12 கைவினைஞர்களுக்கு Shilp Guru விருதுகளை வழங்கிய குடியரசு தலைவர், சிற்பக்கலையில் சிறப்பாக செயலாற்றிய தமிழகத்தை சேர்ந்த பாஸ்கரனுக்கு 2024-ம் ஆண்டிற்கான தேசிய விருதையும் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் நாட்டின் வளர்ச்சிக்காக உத்வேகத்துடன் செயலாற்ற வேண்டுமென்று பிரதமர் திரு. நரேந்திரமோடி அறிவுறுத்தி உள்ளதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நாடாளுமன்ற தேசிய ஜனநாயக கூட்டணி உறுப்பினர்களின் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மக்களின் வாழ்க்கைக்கு சிரமங்கள் இல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் அறிவுறுத்தியதாக குறிப்பிட்டார்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இளையோருடன் தொடர்பில் எப்போதும் இருக்க வேண்டுமென்று பிரதமர் கூறியதாகவும் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

ராம்மோகன் நாயுடு

இண்டிகோ விமான நிறுவனத்தின் செயல்பாடுகள் படிப்படியாக சீரடைந்து வருவதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், விமான சேவைகளை விரைந்து முழுமையாக இயக்க அரசு உறுதியுடன் இருப்பதாக குறிப்பிட்டா◌ா◌்.

விமான போக்குவரத்து சேவை இயல்பாகும் வரை மத்திய அரசு முழுமையான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் உறுதியளித்தா◌ா◌ா◌்.

பயணிகளின் மாண்பும்,அவர்களுக்கான வசதிகளும் பாதுகாக்கப்படும் என்று கூறியஅவர், விமானங்களை பயணிகளுக்கு உகந்ததாக மாற்றுவதற்கான நீண்ட கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டா◌ா◌்.

தற்போதுள்ள நெருக்கடி நிலைக்கு இண்டிகோ நிறுவனமே முழு பொறுப்பு என்று குறை கூறிய அமைச்சர் விமான ஆணைய தலைமையகம் இதுதொடர்பாக நோட்டீஸ் வழங்கி இருப்பதாகவும், இதன் அடிப்படையில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சா◌ித்தா◌ா◌்.

விமான ரத்தால் பயணிகளுக்கு 750 கோடி திருப்பி வழங்கப்பட்டுள்ளதாகவும், கூடுதல் கட்டணமில்லாமல் மறு பதிவிற்கு வகை செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினா◌ா◌்

முன்னதாக இண்டிகோ விமானங்கள் ரத்து பிரச்சனை குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோ◌ா◌ிய எதி◌ா◌்கட்சிகள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

நக்சல் தீவிர வாதத்திற்கு எதிராக பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொள்கையை அரசு பின்பற்றுவதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. நித்தியானந்த ராய் தொ◌ிவித்துள்ளா◌ா◌்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தொ◌ிவித்த அவர், வரும் மா◌ா◌்ச் மாத இறுதிக்குள் தீவிரவாதத்தை வேரோடு அகற்ற இலக்கு நி◌ா◌்ணயிக்கப் பட்டதை அவர் சுட்டிக்காட்டினா◌ா◌்.

இதற்காக மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு செயலாற்றுவதாகவும் அவர் எடுத்துரைத்தாா்.

1967-ம் ஆண்டிலிருந்து தொடங்கிய நக்சல் தீவிரவாதம் அகற்றப்படவே இல்லை என்று அவர் குறிப்பிட்டாா்.

முந்தையை அரசுகள் இதனை மாநில பிரச்சனையாக கருதியதால், பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த வலுவான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றும் தொிவித்தாா்.

2004 முதல் 2014 வரை, 16 ஆயிரம் வன்முறை சம்பவங்கள் நடைபெற்றதாக கூறிய அமைச்சர் மத்திய அரசின் சீாிய நடவடிக்கைகளால் கடந்த 10 ஆண்டுகளில் இது 7 ஆயிரமாக குறைந்திருப்பதாக குறிப்பிட்டாா்.

❖❖❖❖❖❖❖❖

ஷிவ்ராஜ் சிங் சௌஹான்

நாட்டில் நடப்பாண்டில் 357 மில்லியன் டன்னிற்கு அதிகமாக உணவு தானியம் உற்பத்தி இருக்கும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தொிவித்துள்ளாா்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அமைச்சர், இது கடந்த ஆண்டை விட 7.65 சதவிகிதம் அதிகம் என்றாா்

மத்திய அரசின் கொள்கைகள் மற்றும் விவசாயிகளின் கடின உழைப்பால் இது சாத்தியமானதாக அமைச்சர் கூறினாா்.

சென்ற நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவாக அதிக அளவில் பயிா் உற்பத்தி பதிவு செய்யப்பட்டதாக கூறினாா்

2014, 2015-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உணவு தானிய உற்பத்தி 42 சதவிகிதம் கூடுதலாகும் என்றும் குறிப்பிட்டாா்.

❖❖❖❖❖❖❖❖

கீர்த்தி வர்தன் சிங்

கென்யா நைய்ரோபியில் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் அமைப்பின் 7-வது அமர்வில் மத்திய சுற்றுச்சூழல் துறை

இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் இன்று பங்கேற்கிறா◌ா◌்.

பருவநிலை மாற்றம் உயி◌ா◌ி பன்முகத் தன்மையின் இழப்புகள், சுற்றுச்சூழலுக்கு எதிரான சவால்கள் குறித்து இம்மாநாட்டில் வி◌ா◌ிவாக விவாதிக்கப் படுவதாக அமைச்சர் தமது சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளா◌ா◌்.

நேற்று தொடங்கிய இந்த 5 நாள் கூட்டத்தில் இந்தியா உட்பட 193 நாடுகள் பங்கேற்றுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

அன்பில் மகேஷ்

சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா அடுத்தமாதம் 16-ம் தேதி சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கும் என்று மாநில பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொ◌ா◌ிவித்துள்ளா◌ா◌்.

சென்னை கோட்டூர்புரம் நூற்றாண்டு நூலகத்தில் புத்தக கண்காட்சிக்கான இலச்சினையை இன்று வெளியிட்டு பேசிய அவர், 3 நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியில், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கும் என கூறினா◌ா◌்.

பதிப்பாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், இலக்கிய முகவர்கள் நேரடியாக பங்கேற்று காப்புரிமை மற்றும் இலக்கிய பரிமாற்றங்களை மேற்கொள்ளலாம் என்றும் தொ◌ா◌ிவித்தா◌ா◌்.

கலந்துரையாடல்கள், கண்காட்சிகள், கலாச்சார நிகழ்ச்சிகள் உள்ளிட்வற்றிற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டா◌ா◌்.

❖❖❖❖❖❖❖❖

I.N.S. ராஜாளி

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் INS ராஜாளி கடற்படை விமானத்தள வளாகத்தில் 105-வது ஹெலிகாப்டர் பயிற்சி நிறைவு விழாவில், இந்திய கடற்படையின் கிழக்கு கடற்கரை வைஸ் அட்மிரல் சஞ்சய் பல்லா இன்று பங்கேற்றா◌ா◌்.

கடற்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட அவர், ஹெலிகாப்டர் அணிவகுப்பையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசியஅவர், கடற்படையினர் நவீன எதிர்காலத்திற்கு ஏற்றாற்போல அவர்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

சேலம்

சேலம் மாவட்டத்தில் வாக்காளர்கள் நாளை மறுநாளுக்குள் பூர்த்தி செய்த படிவங்களை வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களிடம் சமர்ப்பிக்குமாறு, மாவட்ட துணை ஆட்சியரும், ஓமலூர் தொகுதி வாக்காளர் பதிவு அலுவலருமான திருமதி.மயில் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

S.I.R.

நாகை மாவட்டத்தில் பெறப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்படிவங்களை 100 சதவிகிதம் இணையதளம் மூலம் பதிவுசெய்த வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சித்தலைவருமான திரு. ஆகாஷ் வழங்கி கவுரவித்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களை கணினிமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

திருச்சியிலிருந்து 400 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அரியலூருக்கு இன்று அனுப்பி வைக்கப்படும் நிலையில் மாவட்ட ஆட்சியரும், தேர்தல் அலுவலருமான திரு. சரவணன் இதனை ஆய்வு செய்தார்.

திருச்சியை சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖

இருவாி

கன்னியாகுமாி மாவட்டம் நாகர்கோவிலில் இருந்து கேரளாவிற்கு காாில் கடத்தப்பட்ட ஒரு டன் ரேஷன் அாிசியை காவல்துறையின் பறக்கும் படையினர் இன்று கைப்பற்றி, கோணம் அரசு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ஒப்படைத்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖

பூம்புகார் வாய்ஸ்

தேசிய கைவினை வாரத்தையொட்டி, திருச்சி பூம்புகார் விற்பனை நிலையத்தில் கைவினை பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சி நடைபெறுவதாக, இதன் மேலாளர் திருமதி.காயத்திரி தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நாகை மாவட்டத்தின் ஓாிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தொிவித்துள்ளது.

தமிழக கடலோர பகுதிகள் மன்னாா் வளைகுடா குமாிக்கடல் பகுதியில் சூறாவளிகாற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கடும் குளிரோடு, உறைபனி தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறாா்.

❖❖❖❖❖❖❖❖❖

கிாிக்கெட்

இந்திய - தென்னாப்பிாிக்க அணிகளுக்கு இடையேயான முதலாவது 20-20 கிாிக்கெட் போட்டி கட்டக்கில் இன்றிரவு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடாின் 2-வது போட்டி நாளைமறுநாள் முல்லான்பூாிலும்

3-வது போட்டி தரம்சாலாவில் வரும் 14-ம் தேதியும் நடைபெறுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.